முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**02.04.2021**, வெள்ளிக்கிழமை

1. அண்ணலே ஆறுமுக அரங்கா
அகிலம் காக்கவந்த தேசிகா
மண்ணுலகை உன்தொண்டர்படைவழி
மாற்றம் செய்யவந்த குருராசா
2. அரசனே உன்பெருமை கூறி
அருளுவேன் யோகபிரசன்ன ஆசி
தரணியில் சார்வரி சேல் திங்கள்
தக்க இருபான்திகதி புகர்வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 20ம் நாள், 02.04.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் விசுவாமித்திரர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமில்லா தொண்டர் படைகளை
சுத்த சைவநெறி கொண்டு உருவாக்கும்
4. உருவாக்கும் உயர்ஞானியே அரங்கனே
உன்வழியில் உலகமக்கள் வர
குருவென்று உன்னை சரணடைய
குவலயமே பெரும் பாதுகாப்பு காணும்
5. காணவே பிரணவக் குடிலில்
கருணைபட அரங்கன் நடத்தும்
ஞான பூசை கலந்து வர
ஞானிகளை வணங்கி வர
6. வருகவே மக்களிடை நல்வினை
வளர்ந்து அரங்கன் காட்டும்
தரும பலமாக உருவெடுத்து
தரணியில் ஞான ஆட்சிகாலம்
7. காலம் கனியும் திடமுற
கந்தவேலன் ஆளுமையாக
வாழும் காலமே சூட்சுமசக்தி
வரமாகக் கிட்டி இனிதே
8. இனிதே வளர்ச்சி காணும்
எங்கும் அரங்கன் தயவாக
கனிவான சேவை செயலாக
கட்டாய மாற்றமாகக் கூடி
9. கூடியே ஆறுமுகன் வழிநடத்த
குருபரன் அருளாசி பெருக
ஈடேறும் ஞானிகள் கூட்டம்
இணையில்லாமகா சக்தியாக வளர்ந்து

10. வளர்ந்து வையகத்தில் தானும்
வள்ளலின் நெறி முறைகள்
வளர்ந்து ஞானிகள் கூட்டம்
வளரும் மலரும் சடுதி
11. சடுதி அற்புதம் நடக்க
சடாட்சர ஞானி அருள்பலம்
தடையற பெற்றவர் உயர்வர்
தாமுரைத்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—